Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JANUARY 03, 2024

புதன்கிழமை ஜனவரி 03, 2024 | ஒளி: 10 கதிர்: 163 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## பதிவு செய்யாவிடில் ரூ.50,000 அபராதம்

18 வயதுக்கு மேற்பட்டவர்களின் வரி எண்களைப் பதிவு செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விண்ணப்பத்தை அதன் இணையதளத்தில் சென்று பூர்த்தி செய்து கொள்ளலாம்.

தொடர்ச்சி P2

### ரணிலின் வடக்கு விஜயம்

# “நோக்கம் வேறு”



■ எஸ் தில்லைநாதன்

தமிழ் மக்களின் ஆதரவை எப்படி பெறுவது என்ற நோக்கத்தோடுதான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வடக்குக்கு வருகிறார் என இலங்கை தமிழரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2


## “இலங்கை விரைவாக மீண்டுள்ளது”



வரி செலுத்துவோருக்கு வரி செலுத்தாமல் இருப்பவர்களை அடையாளம் காண உதவ வேண்டிய பொறுப்பு இருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க வலியுறுத்தினார்.

வரி செலுத்துவதைத் தவிர்க்க முயற்சிப்பவர்கள் குறித்து வரி செலுத்துவோர் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று ஆளுநர் கூறினார். இந்த முறையில் வரி தளத்தை

தொடர்ச்சி P2



## யாழ். தீ விபத்தில், மலையக இளைஞர்கள் இருவர் கருகினர்

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியில் கடற்தொழிலாளர்களின் களஞ்சிய சாலையில், செவ்வாய்க்கிழமை (02) அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## மழையால் மாறியது மத்திய நிலையம்



நாட்டில் நிலவும் மழையுடனான வானிலை மற்றும் வெள்ள நிலைமை காரணமாக கெக்கிராவ மடாட்டுகம ரேவத வித்தியாலயத்துக்கான பரீட்சை மத்திய நிலையத்தை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த பாடசாலையில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்காக கல்கிரியாகம மத்திய மகா வித்தியாலயத்தில் புதிய பரீட்சை மத்திய நிலையத்தை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2


## "எம்.பி. ஒருவருக்கு பல இலட்சம் டொலர் வழங்கப்பட்டது"



■ க. அகரன்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA) உறுப்பினர் ஒருவர் கனடாவுக்கு விஜயம் செய்தபோது, CTC மற்றும் அதன் ஆதரவாளர்கள் 1,000,000 டொலர் பணம் செலுத்தியதாக அறியமுடிவதாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## வெள்ளத்தில் மூழ்கியது வெருகலம்பதி ஆலயம்

■ ஏ.எச்.ஏ. ஹூஸைன்

மகாவலி கங்கை கிளை ஆறுகளில் பெருக்கெடுக்கும் வெள்ள நீர் மாவிலாறு மற்றும் வெருகல் கங்கை ஆகியவற்றினூடாக மட்டக்களப்பு திருகோணமலை பிரதான நெடுஞ்சாலையை ஊடறுத்துப் பாய்வதால் அங்கு வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## மின்சார சபை ஊழியர் போராட்டம்



மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான உத்தேச சட்டமூலத்திற்கு எதிராக புதன்கிழமை (03) முதல் மூன்று நாட்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சட்டமூலத்தை உடனடியாக மீளப் பெறுமாறு மின்சக்தி அமைச்சருக்கு அறிவிக்கவுள்ளதாக இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “எரிவாயு விலையை குறைத்திருக்கலாம்”



பெறுமதி சேர் வரி (வற்) வரி அதிகரிக்காப்படாவிட்டால் 12.5 கிலோ கிராம் எடையுள்ள லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலையை அரசாங்கம் ரூ. 685 ஆல் குறைத்திருக்கும் என லிட்ரோ லங்கா தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## கெஹலிய வீட்டின் முன் மலர்வளையம்



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் உத்தியோகப்பூர்வ இலத்துக்கு முன்பாக வைப்பதற்காக மலர் வளையமொன்றை எடுத்துச் சென்றுள்ள சம்பவம் திங்கட்கிழமை(01) இடம்பெற்றுள்ளது.

வைத்தியர் சமல் சஞ்ஜீவ மற்றும் சமூக செயற்பாட்டாளர் சஞ்ஜய மாவத்த உள்ளிட்ட சிலர், மலர் வளையத்தை எடுத்துக்கொண்டுச் சென்று, வீட்டின் படலையை தட்டியுள்ளனர். எனினும், அங்கு கடமையில் இருந்தவர்கள்,

தொடர்ச்சி P2

## ‘அஸ்வெசும’ விண்ணப்பம் விரைவில் கோரப்படும்



2024ஆம் ஆண்டிற்கான அஸ்வெசும விண்ணப்பங்களை கோரும் நடவடிக்கை ஜனவரி மாத இறுதியில் அல்லது பெப்ரவரி மாத தொடக்கத்தில் ஆரம்பிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், அஸ்வெசும திட்டத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தொடர்ச்சி P2

## 61 தாங்கிகளையும் 50 வருட குத்தகைக்கு வழங்க அங்கிகாரம்



திருகோணமலை சீனன்குடா துறைமுகத்தின் மேற்புற தாங்கி திடலானது 99 தாங்கிகளைக் கொண்டமைந்துள்ளதுடன், அவற்றில் 61 தாங்கிகளை திருகோணமலை பெற்றோலிய முனைய தனியார் கம்பனிக்கு 50 வருடகாலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் தலைமையில், செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே இதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த 61 எரிபொருள் தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியவளக் கற்கை உள்ளிட்ட அடிப்படை படிமுறைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

ரணிலின் வடக்கு விஜயம்

# “நோக்கம் வேறு”




அத்துடன், பெறுமதி சேர் (வற்) அதிகரிப்பானது பொருளாதார ரீதியில் மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது எனவும் கூறியுள்ளார்.

மேலும் அவர், ”மக்களுக்கு வருமானம் இல்லை மக்களின் இயல்பான வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. ‘அரகலய’ போராட்டம் போன்ற அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் நிலைக்கு வழியேற்படும். சுயமாக மக்களின் நலன்களைப் பற்றி அரசு சிந்திக்காது சர்வதேச நாணய நிதியத்திற்காகவே செயற்படுகிறது. தேர்தல் பிரசாரத்துக்கான ஆயத்தமாகவே ஜனாதிபதி வடக்கு வருகை உள்ளது. பிரச்சினையை பாராளுமன்றத்திலேதான் தீர்க்க முடியும் என்கிறார். கட்டடம் கட்டித் தருகிறேன்: கைத்தொழில் பேட்டை அமைக்கிறேன் என்று மாத்திரம் சொல்வதற்காக வருகிறார்.

வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய பணத்துக்கு ஒன்றும் நடைபெறவில்லை.

கடந்த வரவு - செலவு திட்டத்தில் தேர்தலுக்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால், தேர்தல் நடைபெறவில்லை. தமிழ் மக்களின் ஆதரவை எப்படிப் பெறுவது என்ற நோக்கத்தோடுதான் அவர் வடக்குக்கு வருகிறார்” என தெரிவித்துள்ளார்.



# பதிவு செய்யாவிடில் ரூ.50,000 அபராதம்

மதிப்பீட்டு ஆண்டிற்கு 1,200,000 ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கும் அனைவரும் வரிக் கோப்பைத் திறக்க வேண்டும். ஒரு வருடத்தின் ஏப்ரல் 1ஆம் திகதி முதல் அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரையிலான காலம் மதிப்பீட்டு ஆண்டாகக் கருதப்படுகிறது.

வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் 50,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. பதிவு செய்துகொள்ளாதவர்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பதிவு செய்யும் எனவும் இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.



# யாழ். தீ விபத்தில்...

மலையகம் , உடப்புசல்லாவ பிள்ளையார் லோமன் தோட்டத்தைச் சேர்ந்த வேலாயுதம் புவனேஸ்வரம் (வயது 46) மற்றும் வேலாயுதம் ரவி (வயது 38) ஆகிய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை முனை பகுதியில் கடற்றொழில் உபகரணங்கள் வைக்கப்பட்டு இருந்த களஞ்சியசாலையில் இருவரும் உறங்கிக் கொண்டிருந்தவேளை, தீ விபத்து ஏற்பட்டு இருவரும், உறக்கத்திலேயே தீயில் எரிந்து உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்துக்கான காரணம் தெரியவராத நிலையில், சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மழையால் மாறியது...



இதனிடையே, இம்முறை உயர்தரப் பரீட்சைக்காக முதல் முறையாக கொரிய மொழி பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பரீட்சை அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள், பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அதனை தரவிறக்கம் செய்ய முடியுமெனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு 346,976 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இவர்களில் 281,445 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் என்பதுடன், 65,531 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை நாடளாவிய ரீதியில் 2,258 பரீட்சை மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# "எம்.பி. ஒருவருக்கு...



இந்த எம்.பி இலங்கையில் விமர்சிப்பவர்களை, சக கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஊடகங்களுக்கு அந்த பணத்தை இலஞ்சமாகக் கொடுத்து வாயடைக்கப் பயன்படுத்துவதாகவும், அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வமற்ற தலைவராகச் செயற்படுவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் போராட்டம் நடத்திவரும் வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் கருத்து தெரிவித்த போதே சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் இவ்வாறு தெரிவித்தனர்.

“கனடாவில் CTCயின் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் தாய்மார்கள் கனேடிய பிரதமரிடம் வலியுறுத்துகின்றனர்.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் போது குழந்தைகளை இழந்த பெண்களின் குழுவான காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளின் தாய்மார்கள், தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையை அங்கீகரித்ததற்கும், பலஸ்தீனப் பிரச்சினைக்கு அவர் வழங்கிய ஆதரவிற்கும் நன்றி தெரிவித்து, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு கடிதம் எழுதியுள்ளோம்.

எவ்வாறாயினும், கனடாவில் புலம்பெயர்ந்த தமிழர்களின் பிரதிநிதியாகக் கூறிக்கொள்ளும் கனேடிய தமிழ் காங்கிரஸ் (CTC) மற்றும் கனடாவுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ள இலங்கை போர்க் குற்றவாளியுடன் அதன் தொடர்பு குறித்தும் அவர்கள் தீவிர கவலைகளை எழுப்பியுள்ளனர்.

அந்த கடிதத்தின்படி, ஐ.நா மற்றும் பிற சர்வதேச அமைப்புகளால் தமிழர்களுக்கு எதிரான அட்டூழியங்கள் மற்றும் மனித உரிமைகளை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்ட இலங்கை போர்க் குற்றவாளியுடன் CTC ஒரு சந்திப்பை நடத்தியது.

இது கனடாவின் வெளியுறவுக் கொள்கையை மீறுவதாகவும் ஒரு போர்க் குற்றவாளியின் அங்கீகாரமாகவும் பார்க்கப்படலாம் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளோம்.

CTCஎன்பது தமிழ் அமைப்பு அல்ல, பணம் மற்றும் புகழால் இயக்கப்படும் சிங்கள அமைப்பு என்றும், அது தமிழர்கள், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மற்றும் பிற நாடுகளைத் தவறாக வழிநடத்துகிறது என்றும் அந்தக் கடிதத்தில் குற்றம் சாட்டியுள்ளோம்.

இலங்கை போர்க்குற்றவாளி இலங்கை கருவூலத்திலிருந்து திருடப்பட்ட நிதியை ரொறன்ரோவில் திருமண மண்டபங்கள் மற்றும் உணவகங்கள் போன்ற வணிகங்களை நிறுவப் பயன்படுத்துவதாகவும், சில CTC உறுப்பினர்கள் இந்த மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் கடிதம் மேலும் கூறுகிறது. டொராண்டோவில் உள்ள அய்யப்பன் கோயிலுக்கும் CTC உறுப்பினர்கள் மூலம் போர்க் குற்றவாளிகளின் முதலீடுகளுக்கும் தொடர்பு இருப்பதையும் அந்தக் கடிதம் வெளிப்படுத்துகிறது.

இந்த பரிவர்த்தனைகள் குறித்து விசாரணை நடத்தவும், கனடாவில் பணமோசடி நடவடிக்கைகள் எதுவும் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்யவும், கனடாவின் வருவாய் திணைக்களத்தை அந்த கடிதத்தின் ஊடாக வலியுறுத்துகிறோம் என்றார்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளின் தாய்மார்கள், CTC மற்றும் அதன் கூட்டாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும், அவர்களின் செயல்களுக்கு அவர்களைப் பொறுப்பேற்குமாறும் பிரதமர் ட்ரூடோவைக் கேட்டுக்கொள்கிறார்கள். மேலும், தமிழர் நலனுக்காகவும், உலகம் முழுவதும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் அவர் தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம்" என தெரிவித்தார்.

# “இலங்கை விரைவாக மீண்டுள்ளது”

விரிவுபடுத்துவது தனிநபர் வரிச் சுமையை குறைக்க மட்டுமே உதவும் என்றார்.

பெரும் பொருளாதார அடிப்படைகள் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், 2022ஆம் ஆண்டை விட நேர்மறையான குறிப்பில் இலங்கை 2023இல் அடியெடுத்து வைத்துள்ளது என்றும், இந்த ஆண்டு நனவாகும் சிறந்த வாய்ப்புகள் நாட்டில் இருப்பதாகவும் கூறினார்.

இதேபோன்ற பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்த வேறு பல நாடுகளையும் விட இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மையை மிக விரைவாக மீட்டெடுத்துள்ளது என்று வலியுறுத்திய அவர் அர்ஜென்டினா, சிம்பாப்வே மற்றும் லெபனான் போன்ற நாடுகளை எடுத்துக்காட்டினார்.

இந்த ஆண்டு மூன்று சதவீத வளர்ச்சியை நாடு எதிர்பார்க்கிறது என்றும் பணவீக்கம் ஐந்து சதவீதமாக ஸ்திரமடையும் என்றும் அவர் கூறினார்.



# மின்சார சபை...

இலங்கை மின்சாரசபையை ஜனாதிபதியுடன் சேர்ந்து மின்சக்தி அமைச்சர் விற்பனை செய்வதற்கு விரும்புவதாகவும், குறித்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் தன்னிச்சையாக நிறைவேற்றப்படுமாயின் பாரிய வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்திற்கு முன்பாக எதிர்வரும் மூன்று நாட்களுக்கு பாரியளவிலான கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

# ‘அஸ்வெசும’...

இதுவரை எங்களால் 1,410,000 பேருக்குப் பணம் செலுத்த முடிந்துள்ளது. அதிக பணவீக்கத்தைக் கொண்டிருந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் அந்தக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, எதிர்காலத்தில், அதில் காணப்படும் பலவீனங்களைத் தவிர்த்து, ஜனவரி இறுதியில் அல்லது பெப்ரவரி ஆரம்பத்தில் அஸ்வெசுமவிற்காக விண்ணப்பங்களைக் கோர எதிர்பார்த்துள்ளோம்.

இதன்போது ஒருபுறம் பொருளாதாரம் மீண்டுவரும். மேலும், சீர்திருத்தச் செயல்பாட்டினுள் பாதிக்கப்படும் மக்கள் குழு உள்ளது. குறுகிய காலத்தில். அவர்களைப் பாதுகாக்கும் வகையில் அஸ்வெசும செயற்படுத்தப்படுகிறது. என்றார்.

# “எரிவாயு விலையை குறைத்திருக்கலாம்”

வற் விதிப்பு இல்லாத நிலையில், 12.5 கிலோ கிராம் எடையுள்ள எரிவாயு சிலிண்டரை ரூ. 3,700 ற்கு விற்கும் சாத்தியம் இருந்திருக்கும் என அவர் கூறினார்.

மேலும் அவர் “நாங்கள் எங்கள் விலையை அதிகரிக்கவில்லை. இருப்பினும், !வற்’ ஐ அதிகரிக்கும் அரசின் முடிவு விலை சீர்திருத்தத்தைத் தூண்டியுள்ளது. எரிவாயு மீதான வற் விதிப்பு பொருத்தமற்றது.

மற்றும் எரிவாயு மீது வற் வரி முன்பு விதிக்கப்படவில்லை. எரிவாயு மீது வற் விதிக்கும் முடிவால் விலையை அதிகரிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது’’ என தெரிவித்துள்ளார்.

# கெஹலிய வீட்டின் முன் மலர்வளையம்

படலையை திறக்கவில்லை. மலர் வளையத்தை வைப்பதற்கும் இடமளிக்கவில்லை.

எவ்வாறாயினும், அந்த சந்தர்ப்பத்தில் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் குறித்த மலர் வளையத்தை வைக்கவிடாது தடுத்தனர்.

# 61 தாங்கிகளையும்...

குறித்த சாத்தியவளக் கற்கை மூலம் இக்கருத்திட்டம் 16 ஆண்டுகளில் 7 கட்டங்களாக அபிவிருத்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், அதன் முதலாவது கட்டத்தின் கீழ் பொருளாதார ரீதியாகப் பயனுறு வாய்ந்த 09 தாங்கிகளை மறுசீரமைப்புச் செய்வதற்கும், கிட்டத்தட்ட 1.75 கிலோ மீற்றர் தூர வீதியைப் புனரமைப்பதற்கும், ஏற்புடைய ஏனைய வசதிகளை நிர்மாணிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நிர்மாணித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) எனும் வணிக மாதிரியைப் பின்பற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, முதலாவது கட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு உத்தேச அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான முதலீட்டாளரைத் தெரிவு செய்வதற்காக, குறித்த பெறுகைச் செயன்முறையைக் கடைப்பிடிப்பதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# வெள்ளத்தில் மூழ்கியது வெருகலம்பதி ஆலயம்

மட்டக்களப்பு- திருகோணமலை எல்லையாக அமைந்துள்ள வெருகல் கங்கை பெருக்கெடுத்தது வெள்ள நீர் பரவிச் செல்கிறது. இதனால் வெருகல் கங்கைக் கரையில் அமைந்துள்ள இந்துக்களின் பிரசித்த பெற்ற வெருகலம்பதி ஆலயம் வெள்ள நீரால் சூழப்பட்டுள்ளது. அங்கு வழிபாடுகள் இடம்பெறவில்லை.

மட்டக்களப்பு - திருகோணமலை வீதியை ஊடறுத்து வெள்ளநீர் பரவிச் செல்வதால் வீதியூடாக சிறிய ரக வாகனங்கள் பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனினும் பஸ் போக்கு வரத்து இடம்பெறுகிறது.

மேலும், கொழும்பு மட்டக்களப்பு நெடுஞ்சாலை போக்குவரத்து மகாவலி கங்கை பெருக்கெடுத்து மன்னம்பிட்டியில் வெள்ளம் பரவிச் செல்வதால் ஏற்கெனவே கடந்த வார இறுதியிலிருந்து போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் அவ்வீதியினூடாகப் பயணிக்கும் சகல வாகனங்களும் மட்டக்களப்பு- திருகோணமலை வீதியையே பயன்படுத்தி வருகின்றன. மட்டக்கள ப்பிலிருந்து கொழும்பு, கட்டுநாயக்கா, புத்தளம், மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவுப் போக்குவரத்துக்கள் தற்பொழுது மட்டக்களப்பு திருகோணமலை வீதியூடாகவே நடைபெறுகின்றது.

வெள்ளம் ஊடறுக்கும் பிரதான வீதியின் இருமருங்கிலும் நின்று வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களும் வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரும் வாகனங்களைப் பாதுகாப்பாகச் செல்லுமாறு வழிகாட்டி வருகின்றனர்.

இதேவேளை, வெள்ளம் பரவியுள்ளதன் காரணமாக வெருகல் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மாவடிச்சேனை, வட்டவான், சேனையூர் உள்ளிட்ட கிராமங்களிலுள்ள 132 குடும்பங்களைச் சேர்ந்த சுமார 660 இற்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்து மாவடிச்சேனை பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் வீடுகள் மற்றும் நெற்செய்கை பண்ணப்பட்டு அறுவடைக்குத் தயாராய் இருந்த வயல்களும் நீரில் மூழ்கியுள்ளன.

# “பாதிப்புகளை அறிக்கையிடவும்”

## அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் அறிவுறுத்தல்



மழை, வெள்ளம், வறட்சி உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களினால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து இடர் முகாமைத்துவ நிலையம் அறிக்கையிட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இயற்கை அனர்த்தங்களின்போது, சொத்துக்கள், உயிர் சேதங்கள் தொடர்பில் மாத்திரம் அறிக்கையிடப்படுகின்ற போதிலும், பயிர்ச் செய்கைகளுக்கான சேத விபரங்கள் பட்டியலிடப்படாமையால் விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பில் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அனர்த்தங்களின்போது, பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உரிய முறையில் நட்டஈடு மற்றும் காப்புறுதிகள் கிடைப்பதில்லை எனவும் சேத விபரங்கள் தொடர்பில் பட்டியலிடாமையே இதற்கு காரணம் எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயங்களை ஆராய்ந்த வடக்கு ஆளுநர், இந்த விடயங்கள் தொடர்பில் இடர் முகாமைத்துவ நிலையம் அறிக்கையிட வேண்டும் என கூறியுள்ளார்.

மேலும், மழை மற்றும் வெள்ளத்தின்போது, கள அறிக்கையிடல் முக்கியமானது எனவும், அனர்த்தங்களின் போது ஏற்படும் அழிவுகள் தொடர்பான தரவுகளை இற்றைப்படுத்தி, உறுதி செய்ய வேண்டியது இடர் முகாமைத்துவ நிலையத்தின் கடமையாகும்.

இவ்வாறு தரவுகள் இற்றைப்படுத்தப்படும் போது, விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல்களை தவிர்க்க முடியும் என தெரிவித்துள்ளதுடன், இற்றைப்படுத்தப்படும் தரவுகளின் பிரதியை ஆளுநர் செயலகத்திற்கும் சமர்பிக்க வேண்டும் எனவும் பணிப்புரை விடுத்துள்ளார்.

# டிஜிட்டல் முகப்பு அலுவலகம் திறப்பு



■ எம்.எம்.றம்ஸீன்

கல்முனை மாநகர சபையில் பொது மக்களுக்கான சேவைகளை ஒரே கூரையின் கீழ் வழங்கும் பொருட்டு டிஜிட்டல் வசதிகளுடன் அமைக்கப்பட்ட Onestop Service - முகப்பு அலுவலகம் மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தலைமையில் திங்கட்கிழமை (01) உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாநகரசபை உத்தியோஸ்தர்கள், மாநகரசபை பொறியியலாளர் ஏ.ஜே.எம்.ஜவ்ஸி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரம்

■ எம்.றொசாந்த்

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகமாக காணப்படும் பிரதேச செயலக பிரிவுகளில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ். நகரம், நல்லூர், கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்தும் வகையில், வடமாகாண பிரதம செயலாளர் தலைமையில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி திங்கட்கிழமை (01) முதல் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைக்காதவர்களும் கடும் நடவடிக்கை எடுக்கவும் பணிக்கப்பட்டுள்ளதுடன், சுகாதார திணைக்களம், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவம் ஆகியோரை குறித்த நடவடிக்கையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# விபத்தை ஏற்படுத்திய சிறுவன் மாயம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை-பிறைந்துறைச்சேனை பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய விபத்தை ஏற்படுத்திய சிறுவனொருவன் காணாமல்போயுள்ள சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சிறுவன் திங்கட்கிழமை (01) காலை சைக்கிளில் செல்லும்போது, முச்சக்கரவண்டியொன்றில் மோதியுள்ள நிலையில், முச்சக்கரவண்டிக்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, குறித்த சாரதி சிறுவனைத் தடுத்து வைத்துள்ளார்.

சிறுவன் நீண்ட நேரம் வீடு வராததால் சிறுவனின் தந்தை தேடியுள்ளனர். பின்னர் சிறுவன் தடுத்து வைக்கப்பட்டதை அறிந்து முச்சக்கரவண்டி சாரதியிடம் மகனைப்பற்றி விசாரித்தபோது, சிறுவனைத் தடுத்து வைத்து பின்னர் அனுப்பிவிட்டுள்ளதாகப் பதிலளித்துள்ளார். இதனையடுத்து, சாரதியைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சிறுவனின் தந்தை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதையடுத்து, வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### வரலாறு காணாத வகையில்

# மரக்கறிகளின் விலை அதிகரிப்பு



மரக்கறிகளின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளதாக நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவரும் அகில இலங்கை ஒன்றிணைந்த விசேட பொருளாதார நிலையத்தின் ஆலோசகருமான அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தற்போது ஒரு கிலோகிராம் கரட்டின் விலை 750 ரூபாயாகவும், பீட்ரூட்டின் விலை 380 ரூபாயாகவும், கோவாவின் விலை 500 ரூபாயாகவும், போஞ்சியின் விலை 600 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

அத்துடன், லீக்ஸ் மற்றும் தக்காளி உள்ளிட்ட ஏனைய மரக்கறிகளின் விலை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது.

மேலும், மரக்கறிகளின் விலை அதிகரிப்பு காரணமாக நுகர்வோர் மரக்கறிகளை கொள்வனவு செய்வதை தவிர்த்து வருவதாகவும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

# சிறுத்தைகளின் நடமாட்டம்; பீதியில் மக்கள்



■ செ.தி.பெருமாள்

கடந்த சில நாட்களாக மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புரவுன்ஷீக் தோட்ட பகுதியில் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனால் அத்தோட்டத்தின் எட்டு பிரிவுகளில் உள்ள தொழிலாளர் குடியிருப்பு பகுதிக்கு சிறுத்தைகள் வந்து வளர்ப்பு நாய்களை கொண்டு செல்வதாக தோட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

நாளாந்தம் பணிக்கு செல்லும் இவர்கள் தற்போது சிறுத்தைகள் நடமாட்டம் காரணமாக பீதியில் உள்ளனர்.

அத்துடன், தேயிலை தோட்டங்கள் பல தற்போது காடாக மாறியதால் சிறுத்தைகளில் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தோட்ட நிர்வாகம் மீது குற்றம் சுமத்தியுள்ளனர்.



# வெள்ளத்தில் மூழ்கிய கிழக்கு





நாட்டில் தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கிலுள்ள பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மேலும், பொதுமக்களின் குடிசைகளிலும், வீடுகளிலும், காணிகளிலும் வெள்ளநீர் நிரம்பியுள்ளதால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. மழையினால் வீதிகள் நீரில் மூழ்கியு ள்ளதால் போக்கு வரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதோடு, பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

– தமிழ்மிரர் நிருபர்கள்









# இனவாத அடித்தளமே இலங்கைக்கு பெரும் சாபக்கேடாகும்

அடுத்த வேளைக்கு என்ன? செய்வதென சாமானியர்கள் சிந்தித்துக்கொண்டிருக்கும் நிலையில், 'அடுத்தது' என்ன? செய்யலாமென அரசியல்வாதிகள் சிந்தித்துக்கொண்டிருக்கின்றனர். அரசியல் மேடைப் பேச்சுகளின் சாராம்சங்கள், 'ஜனாதிபதி' தேர்தலைக் குறிவைத்துள்ளன என்பது தெட்டத்தெளிவாகின்றது.

தங்களுடைய திணைக்களங்களில் புத்தாண்டை முன்னிட்டு கடமைகள் 2024 ஜனவரி 1ஆம் திகதியன்று ஆரம்பித்துவைக்கப்பட்டன. நீதியமைச்சின் வளாகத்தில் இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு கருத்துரைத்திருந்த நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, இந்த தேர்தல் ஆண்டில் இனவாதத்தை இலக்கு வைத்து இனவாதத்தை விதைப்பதற்கு இடமளிக்கக் கூடாதெ தெரிவித்திருந்தார்.

அது பெரும்பான்மை இனமாக இருந்தாலென்ன, சிறுபான்மை இனங்களாக இருந்தாலென்ன, இனவாதத்தைக் கக்குவதற்கான சந்தர்ப்பமொன்று இலங்கை அரசியல்வாதிகளுக்குக் கிடைக்கவிருக்கின்றது. அதனால்தான், அமெரிக்காவின் வேக் ஃபாரஸ்ட் பல்கலைக்கழகத்தின், அரசியல் மற்றும் சர்வதேச விவகாரங்களின் பேராசிரியராக உள்ள நீல் டி வோட்டா, "மாற்றம் எதிருவதாக இருந்தாலும் அடித்தளம் இனவாதம், இதுவே இறுதியில் இலங்கையின் சாபக்கேடாகும்" எனத் தெரிவித்துள்ளார்.

அடுத்த இரண்டு வருடங்கள் இலங்கைக்கு முக்கியமானதாக இருக்கும். 2024ஆம் ஆண்டு இறுதி பிற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலும் 2025ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலும் நடத்தப்படும். ஒத்திவைக்கப்பட்ட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் 2025ஆம் ஆண்டு இறுதியில் நடத்தப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் கடுமையான போட்டி நிலவுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. புதிய கூட்டணிகள் அமைக்கும் முயற்சிகள் மும்முரமாக இடம்பெறுகின்றன. பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஸா தலைமையில், 71 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் புதியக்கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில புதிய கூட்டணிகள், ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு உருவாக்கப்படுமென அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. எனினும், பொருளாதார ரீதியில் நாடு இன்னுமே மீட்டெடுக்கப்படவில்லை. சாதாரண மக்களின் மீது வரிச்சுமை சுமத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. இதனால், மக்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு முகங்கொடுத்துக்கொண்டு இருக்கின்றனர்.

தென் மாகாண தொகுதியின் முன்னாள் பிரதம அமைப்பாளராகக் கடமையாற்றிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் டி சில்வா, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை திங்கட்கிழமை (01) சந்தித்து ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் பிவித்துரு ஹெல உறுமயவுக்கும் இடையில் அரசியல் கூட்டணிக்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானபுதிய கூட்டணிகள், ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு முளைக்கும். அதில், எத்தனை கூட்டணிகள், இனவாதம் இல்லாத கூட்டணியாக இருக்குமென்பது ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்களின் போதே, தெரிந்துகொள்ள முடியும்.

நீல் டி வோட்டா கூறியிருப்பதைப் போல, இனவாத அடித்தளமே இலங்கைக்கு பெரும் சாபக்கேடாகும் என்பதைக் கூறிக்கொள்கின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

# தீர்வுக்கும் 13க்கும் இடையில் ஊஞ்சலாடுதல்



எம்.எஸ்.எம். ஐயூப்

இலங்கையின் இனப் பிரச்சினயைப் பற்றிய முடிவில்லா கலந்துரையாடல்களில் மற்றொன்று கடந்த (டிசெம்பர்) மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநித்தித்துவப்படுத்தம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று கூறினாலும், வட மாகாணத்தைச் சேர்ந்த ஈழ மக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர் குலசிங்கம் திலீபன் மட்டுமே இக்கலந்துரையாடலில் பங்குபற்றியதாகத் தெரியவந்தது. ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட சில உறுப்பினர்கள் வட மாகாணத்தைச் சேர்ந்தவர்களாயினும் அதில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை என்றே கூறப்பட்டது.

இக்கூட்டத்துக்கு தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். அக்கட்சியில் இரண்டு உறுப்பினர்கள் இருக்கின்றனர். முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய முன்னணிக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும், அச்சந்திப்பில் எவ்வித பயனும் இல்லை என்று விக்னேஸ்வரன் அதில் கலந்து கொள்ளவில்லை.

எனினும் வடக்கு, கிழக்கு அரசியலில் மிகவும் முக்கிய நபரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர். செய்திகளின்படி, அம்மாகாணத்தைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர்களான வியாழேந்திரனும் சந்திரகாந்தனும் கலந்துகொள்ளவில்லை.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் மற்றும் அரச அதிகாரிகள் அதில் கலந்துகொண்டனர். ஆயினும் இச்சந்திப்பின் மூலம் எதுவும் நடக்கப் போவதில்லை என்பதைப் போல், சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் அதனை முற்றாகப் புறக்கணித்ததை அவதானிக்க முடிந்தது. அரச ஊடகங்களாவது அதற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. கூட்டத்தின் பின்னர் தமிழ் அரசியல்வாதிகள் வெளியிட்ட கருத்துக்களைப் பார்க்கும்போது, அரசாங்கமோ அல்லது ஜனாதிபதி ரணிலோ இனப் பிரச்சினையைத் தீர்க்க கடுகளவிலாவது முக்கியத்துவமுள்ள எதையாவது செய்வார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லை என்பது தெளிவாகிறது.

அதனால்தான் விக்னேஸ்வரன் முதலிலேயே கூட்டத்தில் பங்கேற்காது ஒதுங்கி விட்டார். ஜனாதிபதியினால் எமக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேற்றப்படாத நிலையில், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் அவருடன் கலந்துரையாடுவதில் எந்தப் பயனும் இல்லை என்று அவர் கூட்டத்துக்கு முன்னரே கூறியிருந்தார்.

மேலும், ரணிலை தனக்கு பாடசாலை காலத்திலிருந்தே தெரியும் என்றும் ஏனைய சிங்களத் தலைவர்களுடன் ஒப்பிடும்போது, அவர் இனவாதமற்றவராக இருந்த போதிலும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அரசியலமைப்பிலிருந்து அகற்றி இந்தியாவின் தலையீட்டை இல்லாதெழிப்பதற்கான முயற்சிகளை எடுக்க அவர் நினைக்கிறார் என்றும் விக்னேஸ்வரன் இக்கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் குற்றஞ்சாட்டினார்.

அரசாங்கத்தின் மீதும் ஜனாதிபதியின் மீதுமான இந்த நம்பிக்கையின்மையை ஜனாதிபதியுடனான சந்திப்பில் பங்கேற்ற சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார். நீங்கள் தொடர்ந்தும் நல்லிணக்கம் என்ற கொடியைக் காட்டி எம்மை ஏமாற்றவே முயல்கின்றீர்கள். தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்காது வெறுமனே நல்லிணக்கத்தைப் பற்றி வாய்ப் பேச்சில் மட்டுமே உள்ளீர்கள் என்று அவர் காட்டமாகக் கூறியிருக்கிறார்.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு சம்பந்தன் வலியுறுத்தவே அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, 13ஐ அமுல்படுத்துவதற்கு தற்போதைய பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாது என்றும் அடுத்த பாராளுமன்றத்திலேயே அதனைச் செய்ய முடியும் என்றும் கூறியுள்ளார். அடுத்த பாராளுமன்றம் தெரிவாகி ஒரு வருடத்தினுள் புதிய அரசியலமைப்பை உருவாக்கி முன்னாள் முதலமைச்சர்கள் உள்ளிட்ட குழுவொன்றின் மூலம் மாகாண சபைகளைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நியமிக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவைப் பற்றி ஜனாதிபதி குறிப்பிட்டபோது, அவ்வாணைக்குழு தொடர்பான வர்த்தமானியில் நீதிக்கான பொறிமுறையோ, சர்வதேச மேற்பார்வையோ, சர்வதேச நீதியரசர்களோ குறிப்பிடப்படவில்லை என்றும் அதனைப் பாதிக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதிகள் என்ற முறையில் தாம் நிராகரிப்பதாகவும் இலங்கை தமிழரசுக் கட்சியின் எம்.பி சாணக்கியன் இராசமாணிக்கம் கூறியுள்ளார்.

இக்கலந்துரையாடலுக்கு தமது கட்சிக்கு அழைப்பு விடுக்காததையிட்டு அரசாங்கத்தை விமர்சித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒன்றரை ஆண்டுகளாகத் தமிழ் தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி வரும் ஜனாதிபதி, இப்போது அடுத்த தேர்தலின் பின்னர் ஒரு வருடத்துக்குள் தீர்வு வழங்குவேன் என்று கூறியிருப்பதன் மூலம் ஒன்றரை வருடங்களாகக் கூறி வந்த பொய்யை வெளிப்படையாகவே ஏற்றுக்கொண்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் தொடர்ந்து தமிழினத்தை ஏமாற்றி, தமிழ் அரசியல்வாதிகளைப் பாவித்து, தன்னுடைய அடுத்த தேர்தல் வெற்றிக்கான நிகழ்ச்சி நிரலையே இவ்வாறு கொண்டு செல்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தேர்தல் வெற்றிக்கான ஜனாதிபதியின் முயற்சி என்பதே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் த்லைவர் சுரேஷ் பிரேமசந்திரனினதும் கருத்தாக இருக்கிறது.

மேலும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் வெற்றிகொள்வதற்குப் புலம்பெயர் தமிழர்களையும் வடக்கு, கிழக்கு தமிழர்களையும் எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது என்ற சிந்தனையில் ஜனாதிபதி செயற்படுகிறாரே தவிர, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவரது முன்னுரிமை பட்டியலில் கிடையவே கிடையாது என்று அவர் அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருந்தார். கூட்டத்தையடுத்து மிகவும் விரக்தியடைந்த விகனேஸ்வரனும் தமிழ் மக்கள் எந்தவொரு சிங்கள ஜனாதிபதியிடமும் தீர்வுகளை எதிர்பார்ப்பது கடினமான விடயம் என்று ஊடகவியலாளர்களிடம் தெரிவித்து இருந்தார்.

2001 வரை இனப் பிரச்சினையைப் பொறுத்தவரை ரணிலுக்கும் ஏனைய தென்பகுதி தலைவர்களுக்கும் இடையில் எந்தவித வேறுபாடும் இருக்கவில்லை. ஆனால், 2001 தேர்தலில் வெற்றிபெற்று பிரதமராகப் பதவியேற்றதிலிருந்த அவர் மாறிவிட்டார். பதவியேற்று இரண்டரை மாதங்களில் அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்த உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டு அவ்வருடம் செப்டெம்பர் மாதம் சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். தென் பகுதி எதிர்ப்பை கருத்திற்கொள்ளாது அவ்வாண்டு டிசெம்பர் மாதம் புலிகளுடன் சமஷ்டி உடன்படிக்கை ஒன்றையும் செய்து கொண்டார். ஏறத்தாழ தமிழீழத்தையொத்த புலிகளின் இடைக்கால சுயாட்சி அதிகாரசபைத் திட்டத்தைப் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்த இணக்கம் தெரிவித்தார். ஆனால், 2022 ஜனாதிபதி பதவியை ஏற்றது முதல் அவர் மீண்டும் மாறிவிட்டார். 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதாக அறிவித்தார். அவ்வாறாயின் 2023 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் 13ஐ பூரணமாக நிறைவேற்றிக் காட்டுங்கள் என்று தமிழ் கட்சிகள் கூறியபோது, அதனையும் ஏற்றார். பின்னர் அவர் இரண்டு வருடங்களில் 13ஐ பூரணமாக நிறைவேற்றுவதாக ஜனவரி 15ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று கூறினார். அதனையும் மறந்து ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றும்போது, 2023 இறுதிக்குள் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதாக அறிவித்தார். அதையும் மறந்து ஜூலை மாதம் இந்திய விஜயத்துக்கு முன்னர் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்காது 13ஐ நிறைவேற்றப் போவதாகக் கூறினர். இவ்வாறு இனப் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வுக்கும் 13க்கும் இடையே ஊஞ்சலாடிக்கொண்டு இருந்துவிட்டு இப்போது அவர் அடுத்த தேர்தலுக்குப் பின்னர் ஒரு வருடத்துக்குள் புதிய அரசியலமைப்பொன்றின் மூலம் 13ஐ அமுல்படுத்துவதாக வாக்குறுதியளிக்கிறார். இச்சம்பவங்கள் அவரது நேர்மையை கடும் சவாலுக்குள்ளாக்குகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் எம்பிக்கள் பெரும்பான்மையாக இருக்கும் தற்போதைய பாராளுமன்றத்தால் 13ஆவது அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கு ஆதரவைப் பெற முடியாது என்றால் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நடத்திய பேச்சுவார்த்தைகளும் வழங்கிய வாக்குறுதிகளும் வெறும் நாடகமா? பொதுஜன முன்னணி அதிகார பரவலாக்கலை எதிர்க்கும் கட்சி என்பது அவருக்கு இதற்கு முன்னர் தெரியாதா?

அடுத்த பாராளுமன்றம் அத்திருத்தத்தை அமுலாக்க ஆதரவு வழங்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? .புதிய அரசியலமைப்பின் மூலம் இப்பிர்சினையை தீர்ப்பதாக இருந்தால் அவ்வரசியலமைப்பை நிறைவேற்ற அடுத்த தேர்தலில் ஜனாதிபதியின் கட்சிக்கு முன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைக்க வேண்டும். அதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?



## வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன் எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழுதும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்ணியமாக நடந்து கொள்வபர்களேயே சமூகம் விரும்புகின்றது.

எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப்போய் விடுவார்கள். நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனொ சக்தி பிரதானமானது.

நல்லன எதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கரையோரங்களில் கழிவுகளை அகற்ற கோரிக்கை



அம்பாறை மாவட்ட கடற்கரையோரங்களில் பிளாஸ்டிக் மற்றும் இறந்த தாவரங்களின் கழிவுகள் அதிகளவாகத் தென்படுவதைக் காணமுடிகின்றது.

குறிப்பாக அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீர் வழிந்தோடுவதற்காக தற்காலிகமான கால்வாய்கள் கடலை நோக்கி வெட்டப்பட்ட நிலையில், இவ்வாறான கழிவுகள் அதிகளவாகக் கடற்கரையில் கரை ஒதுங்கி நிறைந்து காணப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, மாளிகைக்காடு உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறான கழிவு அடையாளங்கள் தென்பட்டுள்ளன.

இவ்வாறான கழிவு பரவலானது கரையோர மீனவர்களது மீன்பிடி தொழிலுக்கு பெரும் சிரமங்களைக் கொடுப்பதுடன், வலைகளிலும் சிக்கி வருகின்றன.

எனவே, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தில் உடனடியாக தலையிட வேண்டும் என பாதிக்கப்பட்ட மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

- பாறுக் ஷிஹான்



# வாழ்வாதார உபகரணங்கள் வழங்கி வைப்பு

அகம் தன்னார்வ அமைப்பின் அனுசரணையில் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் அங்குள்ள இரண்டு சங்கங்களுக்கு சுயதொழிலுக்கான வாழ்வாதார உபகரணங்கள் மற்றும் நல்லின மாங்கன்றுகள் வழங்கி வைக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (01) மூதூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில், அகம் நிறுவன பிரதிநிதிகள் சமூகமளித்திருந்துள்ளதுடன், இதற்குத் தேவையான செயன்முறைப் பயிற்சிகள் அகம் நிறுவனத்தினால் ஏற்கெனவே பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எஸ்.எல்.நௌபர்





# ஜனாதிபதி வருகை ஏற்பாட்டு கூட்டம்

வடக்கிற்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, யாழ்ப்பாணத்தில் நாளை வியாழக்கிழமை (4) முதல் தொடர் சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார். இதன்போது, கிளிநொச்சி மாவட்டத்தின் தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கு எடுத்துக்கூறுவதற்கான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடலொன்று திங்கட்கிழமை (01) கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

நடராசா கிருஸ்ணகுமார்



# சுவாமி விவேகானந்தருக்கு சிலை





ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் நூற்றாண்டு நிறைவு விழா தொடரை ஆரம்பிக்கும் முகமாக மட்டக்களப்பு புதிய கல்லடி பாலத்தின் அருகாமையில் இராம கிருஷ்ண மிஷனை ஸ்தாபித்த சுவாமி விவேகானந்தருக்கு சிலை அமைக்க அடிக்கல் நாட்டப்படும் நிகழ்வு ஸ்ரீமத் சுவாமி நீல மாதவானந்தா ஜீ மஹாராஜ் தலைமையில் திங்கட்கிழமை (01) இடம்பெற்றுள்ளது.

எம் எஸ் எம் நூர்தீன்







# விஸ்வகீர்த்தி விருது விழா

மத்திய மாகாண வத்தேகம கல்வி வலய கல்விப் பணிப்பாளர் W.M.T.N. குணரத்ன மலையக கலை கலைசார சங்கத்தின் இரத்தின தீப உயரிய விருதான விஸ்வ கீர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். பன்விலை விக்னேஸ்வரா விஞ்ஞான பாடசாலை கண்டி கலை கலாசார சங்கத்தோடு இணைந்து நடத்திய இவ்விழாவில் கல்விப் பணிப்பாளர் ஜனாப் I.ஹாசிம்,ராஜா ஜென்கின்ஸ் உட்பட சாதனையாளர்களுக்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

மெய்யன்





# கடமை நடவடிக்கைகளை ஆரம்பித்தல்




புதிய ஆண்டிற்கான (2024) அரசாங்க சேவை சத்தியப் பிரமாணம் செய்யும் நிகழ்வு நிலாவெளி மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் திங்கட்கிழமை (01) இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில், நிலாவெளி மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அபு அலா

# 144ஆவது ரமண ஜெயந்தி விழா



பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் 144ஆவது ஜெயந்தி விழா 28 டிசம்பர் 2023 அன்று திருவண்ணாமலை ரமணாச்சிரமத்தில் கொண்டாடப்பட்டது.

2024 ஜனவரி 7 அன்று இல-41, விவேகானந்த வீதி, வெள்ளவத்தையில் மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை நடைபெறும்.

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி 30ஆம் திகதி டிசெம்பர் மாதம் 1879ஆம் ஆண்டு மதுரை, திருச்சுழி எனும் சிற்றூரில் வாழ்ந்த சுந்தரம் ஐயர் அழகம்மாள் தம்பதியினருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். தாய் தந்தையர் இட்ட பெயர் வெங்கடராமன். 1892இல் தந்தையின் திடீர் மரணத்தின் பின்னர் மதுரையில் உள்ள தன் சிற்றப்பா வீட்டிலிருந்து தனது படிப்பைத் தொடர்ந்தார்.

1896ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒருநாள் தனிமையில் இருக்கும்போது, மரண பயமும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அனுபவமும் அவரின் வாழ்வில் ஓர் திருப்புமுனையாக அமைந்தது.

இதனைத்தொடர்ந்து, 1896ஆம் ஆண்டு ஒகஸ்ட் 29ஆம் திகதி வீட்டைவிட்டு வெளியேறி செப்டெம்பர் மாதம் 1ஆம் திகதி திருவண்ணாமலை வந்து, அருணாசலேச்வரர் திருக்கோவிலுக்கு விரைந்து கருவறை புகுந்து ஸ்ரீ அருணாசலேச்வரர் பாதாளலிங்கத்தின் முன் தன்னை மறந்த ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்தார்.

பின்னர் கோவிலைச் சூழ்ந்த பல இடங்களில் வசித்து விருபாட்ச குகையில் 1899இல் வாசம் செய்தார். 1907இல் காவ்யகண்ட கணபதி சாஸ்திரி 'பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி' என்ற நாமத்தைச் சூட்டி போற்றினார். 1916இல் பகவான் ஸ்கந்தாச்ரமத்திற்கு இடம் மாறினார்.

1922இல் பகவான் தன் திருக்கரத்தால் தயாரிட்கு முக்தி அளித்தார். 1922 டிசெம்பர் நடுப்பகுதியில் பகவான் தற்போதைய ஸ்ரீ ரமணாச்ரம ஸ்தலத்திற்கு வந்து நிரந்தரமாய் தங்கினார். 1949இல் பகவானின் இடது புஜத்தில் புற்றுநோய் பரவியது. 1950 ஏப்ரல் 14ஆம் திகதி இரவு 8.47 க்கு தேகவியோகமானார். அத்தருணம் ஒரு பெரிய எரிநட்சத்திர ஜோதி வானவெளியில் தோன்றி அண்ணாமலை உச்சியில் மறைவதை இந்தியாவிலும் இலங்கையிலும் பலர் அவதானித்தனர் எனக் கூறப்படுகிறது.

பகவான் ரமணரின் 144ஆவது ஜெயந்தி நிகழ்வுகள் பல இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும்

பகவானின் வாய்மொழிகளை மேலும் விளங்கி அனுஷ்டிக்க விரும்பும் அன்பர்கள், ஒவ்வொரு ஞாயிறுதோறும் மாலை 4 மணி தொடக்கம் 6 வரை, 41, விவேகானந்த வீதி, வெள்ளவத்தையில் இயங்கும் கொழும்பு ரமண பீட நிகழ்வில் பங்குகொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றோம்.



# 30 ஆண்டுகளின் பின்னர் வரலாற்றுத் தடயம்

கல்முனை கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட்டு முப்பது ஆண்டுகளின் பின்னர் வலயத்திற்கான கீதத்தை அறிமுகம் செய்யும் நிகழ்வும் புதிய கல்வியாண்டிற்கான சத்தியப்பிரமாணம் மற்றும் நாட்டிற்காக உயிர்நீத்த படைவீரர்களுக்கான மௌனப் பிரார்த்தனையும் வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் திங்கட்கிழமை (01) இடம்பெற்றுள்ளது.

கல்முனை வலய தமிழ் மொழிப் பிரிவின் ஒருங்கிணைப்பில் வளவாளராக இருந்து ஓய்வுபெற்ற க.குணசேகரம் கீதத்தை இயற்றியதுடன், காரைதீவைச் சேர்ந்த ஊடகவியலாளர் இ.கோபாலசிங்கத்தின் இசையில் வலயக் கல்வி அலுவலக இசைத்துறைக்கான வளவாளர் எஸ்.கமலநாதன் கீதத்தை பாடியுள்ளார்.



பாகிஸ்தான்

# “தார்மீக உரிமையை இழக்கிறார்”



பாகிஸ்தானில் எதிர்வரும் பெப்ரவரி 8ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் பிடிஐ (PTI) தெஹ்ரிக்-ஏ-இன்சாஃப் (Tehreek-e-Insaf) கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான 71 வயதான இம்ரான் கான் வேட்புமனு தாக்கல் செய்தார். ஆனால், ஊழல் வழக்கில் சிறை தண்டனை பெற்றவரான அவரது மனு, பாகிஸ்தான் தேர்தல் ஆணையத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. இதனை விளக்கி அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

“இம்ரான் கான் நேர்மையற்றவர் என தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. அத்தகைய ஒருவர் தேர்தலில் போட்டியிட தார்மீக உரிமை இழந்தவராகிறார். அரசு கஜானாவிற்கு சேர்க்க வேண்டிய பொருளை முறைகேடாக பயன்படுத்தி இலாபம் ஈட்டிய வழக்கில் நேர்மையற்றவராக கருதி தேர்தலில் போட்டியிட நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அந்த தகுதியின்மை அவருக்கு தொடர்கிறது. தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதே தவிர, தீர்ப்பு நிறுத்தி வைக்கப்படவில்லை. எனவே தேர்தலில் போட்டியிடும் தார்மீக உரிமையை இம்ரான் இழக்கிறார்” என அதில் கூறப்பட்டுள்ளது.

ஜப்பான்

# 155 முறை நிலநடுக்கம்; 48 பேர் பலி

ஜப்பானில் திங்கட்கிழமை (01) பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.6 பதிவானதால் கட்டடங்கள் குலுங்கின. வீதிகள் பிளந்து, கடும் சேதம் அடைந்தன. மிகப்பெரிய நிலநடுக்கம் என்பதால் உயர்மட்ட சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பின்னர் அது திரும்பப் பெறப்பட்டது.

இருந்த போதிலும், புத்தாண்டு தினத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை (02) வரை அதிர்ந்து கொண்டே இருந்ததாக ஜப்பான் வானிலை மையம் தெரிவித்துள்ளது. மொத்தம் 155 முறை நில அதிர்வு ஏற்பட்டதாக தெரிவித்துள்ளது. இதில் பெரும்பாலன நிலநடுக்கங்கள் ரிக்டர் அளவில் 3க்கும் அதிகமாக பதிவாகியுள்ளன. இந்த நிலநடுக்கம் காரணமாக 48 பேர் உயிரிழந்துள்ளனர்.

இன்னும் ஓரிரு நாட்களில் பயங்கர நிலநடுக்கும் ஏற்பட வாய்ப்புள்ளதால் கடற்கரையோர பகுதிகளில் கவனமாக இருக்க எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், நிலநடுக்கம் குறித்து செல்போனில் எச்சரிக்கை மணி ஒலித்ததால் மக்கள் சுதாரித்துக் கொண்டு பாதுகாப்பான இடத்திற்கு சென்றதால் உயிரிழப்பு பெரிய அளவில் இல்லை.

இருந்த போதிலும், 48 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தென் கொரியா

# எதிர்க்கட்சி தலைவருக்கு கத்திக்குத்து

தென் கொரியாவின் எதிர்க்கட்சி தலைவர் லீ ஜே மியாங் இனந்தெரியாத நபரொருவரால் கத்தி குத்துக்கு இலக்காகியுள்ளார்.

தென் கொரியாவின் எதிர்க்கட்சித் தலைவர் லீ ஜே மியாங் தெற்கு துறைமுக நகரமான பூசானுக்கு சென்ற நிலையில், அங்கு விமான நிலையத்தை அவர் சுற்றி பார்வைட்டுள்ளார்.

இதன்போது, இனந்தெரியாத நபரொருவர் லீ ஜே மியாங்கின் கழுத்தின் இடது பக்கத்தில் கத்தியால் குத்தியுள்ளார்.

இதையடுத்து, லீ ஜே மியாங் வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலை நடத்திய இனந்தெரியாத நபர் சம்பவ இடத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



பீகார்

# கர்ப்பமாக்கினால் ரூ.13 இலட்சம்



இந்தியாவின் பீகார் மாநிலத்தில் கர்ப்பம் தரிக்க முடியாத நிலையில் இருக்கும் பெண்களைக் கருத்தரிக்க வைக்கும் ஆண்களுக்கு ரூ.13 இலட்சம் வரை வழங்குவதாக கூறி நூதன மோசடியில் ஈடுபட்ட கும்பலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


பீகார் மாநிலம் நவாடா பகுதியில் ‘பிரக்னண்ட் ஜாப் ஏஜென்சி’ என்ற பெயரிலான நிறுவனத்தில் பணி புரிய ஆட்கள் தேவை என விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதில், இந் நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளும் ஆண்கள், குழந்தை பெறமுடியாமல் தவிக்கும் பெண்களை தெரிவு செய்து அவர்களை கர்ப்பமாக்கலாம். இதற்காக முதலில் ரூ.799 வைப்புத் தொகை செலுத்தி நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டும். பின்னர் பெண்களின் புகைப்படங்கள் வழங்கப்படும்.

அவ்வாறு வழங்கப்படும் பெண்களின் அழகை பொறுத்து ரூ.5 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை வைப்புத்தொகை செலுத்தினால் அந்த பெண்களுடன் உல்லாசமாக இருக்கலாம். அந்த பெண் கர்ப்பம் அடைந்தால் சம்பந்தப்பட்ட ஆண்களுக்கு ரூ.13 இலட்சம் வரை தொகை வழங்கப்படும்.

அவ்வாறு கர்ப்பமாகாவிட்டாலும் ஆறுதல் தொகையாக ரூ.5 லட்சம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதை பார்த்த சில வாலிபர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் பணத்தை செலுத்த தொடங்கி உள்ளனர். ஆனால் நாட்கள் பல சென்ற பின்னரும் கடைசி வரை பெண்களின் புகைப்படங்களை அனுப்பவில்லை. அதன் பிறகு தான் சம்பந்தப்பட்ட வாலிபர்களுக்கு தாங்கள் மோசடி செய்யப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து அவர்கள் பீகார் பொலிஸில் புகார் செய்துள்ளனர்.



குஜராத்

# சூரிய நமஸ்காரத்தில் கின்னஸ் சாதனை

குஜராத் மாநிலத்தில் ஒரே நேரத்தில் சுமார் 4 ஆயிரம் பேர் சூரிய நமஸ்காரம் செய்து கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளனர்.

ஆங்கிலப் புத்தாண்டையொட்டி குஜராத்தின் மெஹ்சானா மாவட்டத்தில் உள்ள 51 வெவ்வேறு ஊர்களில், 108 இடங்களில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஒரே நேரத்தில் சூரிய நமஸ்காரம் செய்து கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளனர்

இந்த சாதனை நிகழ்வில், பல குடும்பங்கள், மாணவர்கள், யோகா ஆர்வலர்கள், மூத்தகுடிமக்கள் உள்பட பல்வேறு தரப்பினர் உற்சாகமாகப் பங்கேற்றனர்.

ஐதராபாத்

# பிரியாணி ‘ருசி'யாக இல்லாததால் மோதல்

ஐதராபாத் அமிட்சில் பழைமை வாய்ந்த பிரபல ஹோட்டல் இயங்கி வருகிறது. இந்த ஹோட்டலில் ஐதராபாத் பிரியாணி மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு, அங்கு கூட்டம் நிரம்பி வழிந்தது. அப்போது வாடிக்கையாளர்கள் கும்பலாக பிரியாணி உண்பதற்கு சென்றுள்ளனர். அவர்களுக்கு பரிமாறப்பட்ட பிரியாணி சூடாக இல்லை. மேலும், ருசியாகவும் இல்லை என வாடிக்கையாளர் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.



இது தொடர்பாக வாடிக்கையாளர்களுக்கும் ஹோட்டல் ஊழியர்களுக்கும் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில், திடீரென அவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். திடீரென இந்த வாடிக்கையாளர் ஹோட்டல் ஊழியரை தாக்கியதால் நிலைமை மோசமாகியுள்ளது. இது தொடர்பாக 6 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.



இன்று ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்

# தொடரை சமப்படுத்துமா இந்தியா?

தென்னாபிரிக்க, இந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது கேப் டௌணில் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் தோல்வியடைந்துள்ள இந்தியா, தென்னாபிரிக்காவுக்கு இரண்டாவது போட்டியில் சவாலை அளிப்பதற்கு பந்துவீச்சு, துடுப்பாட்டத்தில் பாரியளவு முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக பந்து அதன் புதிய தன்மையை இழந்த பின்னர் ஓட்டங்களைக் கட்டுப்படுத்தினாலே தென்னாபிரிக்காவுக்கு இந்தியா சவாலை அளிக்கலாம்.

இந்தியாவைப் பொறுத்த வரையில் முதலாவது போட்டியில் விளையாடிய இரவிச்சந்திரன் அஷ்வினுக்குப் பதிலாக இரவீந்திர ஜடேஜா களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக தென்னாபிரிக்காவில் காயமடைந்துள்ள அணித்தலைவர் தெம்பா பவுமா மற்றும் ஜெரால்ட் கொயட்ஸியை அணியில் ஸுபைர் ஹம்ஸா, கேஷவ் மஹாராஜ் ஆகியோர் பிரதியிடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மட்ரிட்டில் தொடரும் க்றூஸ்


ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் மத்தியகளவீரரான டொனி க்றூஸுடன் கழகமானது ஒப்பந்தக் கலந்துரையாடல்களை நடத்துவகாகக் கூறப்படுகிறது.

அந்தவகையில் 33 வயதான க்றூஸுக்கு ஓராண்டு ஒப்பந்த நீடிப்பு வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.



இலங்கைக்கெதிரான தொடருக்கு சிம்பாப்வே குழாமில்


# வில்லியம்ஸ் இல்லை



இலங்கைக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டி, இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான சிம்பாப்வே குழாம்களில் காயம் காரணமாக சகலதுறைவீரர் ஷோன் வில்லியம்ஸ் இடம்பெறவில்லை. இதேவேளை, காயத்திலிருந்து குணமடைந்த கிரேய்க் எர்வின் குழாம்களில் இடம்பெற்றுள்ளார்.

ஒ.நா.ச.போ குழாம்: கிரேய்க் எர்வின் (அணித்தலைவர்), பராஸ் அக்ரம், றயான் பேர்ள், ஜொய்லோர்ட் கும்பி, லுக் ஜொங்வி, தகுட்ஸ்வனஷே கைட்டானோ, தினஷே கமுன்ஹுகம்வே, கிளைவ் மடன்டே, வெலிங்டன் மஸகட்ஸா, தபிவா முஃபுட்ஸா, டொனி முயொங்கா, பிளஸிங் முஸர்பனி, றிச்சர்ட் நகரவா, சிகண்டர் ராசா, ஷும்பா மில்டன். இ-20 ச.போ குழாம்: சிகண்டர் ராசா (அணித்தலைவர்), பிறையன் பென்னிட், றயான் பேர்ள், கிரேய்க் எர்வின், ஜொய்லோர்ட் கும்பி, லுக் ஜொங்வி, தினஷே கமுன்ஹுகம்வே, கிளைவ் மடன்டே, வெலிங்டன் மஸகட்ஸா உள்ளிட்டோர்.

# ஆப்கானிஸ்தானின் பயிற்சியாளராகத் தொடரும் ட்ரோட்



ஆப்கானிஸ்தானின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் ஜொனதன் ட்ரோட்டின் ஒப்பந்தமானது ஓராண்டால் நீடிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் முன்னாள் வீரரான ட்ரோட்டின் 18 மாத ஒப்பந்தமானது கடந்தாண்டுடன் முடிவடைந்திருந்தது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான், இங்கிலாந்து, இலங்கை, நெதர்லாந்தை ஆப்கானிஸ்தான் வென்றிருந்தது.



# பரிஸ் ஸா ஜேர்மைனிலிருந்து வெளியேறும் நவாஸ்?

பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜேர்மைனின் கோல் காப்பாளரான கெய்லர் நவாஸை மீண்டும் கைச்சாத்திடுவது குறித்த பேச்சுக்களை அக்கழகத்துடன் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான நொட்டிங்ஹாம் பொரெஸ்ட் ஆரம்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த பருவகாலத்தின் இரண்டாவது பாதியை பொரெஸ்டில் கடனடிப்படையில் 37 வயதான நவாஸ் கழித்திருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 03, ஜனவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.